**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

2024–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06–ம் நாள் சனிக்கிழமை

******

**இடைமனு எண்.7/2023–ல் அசல் வழக்கு எண். 78/2011**

1. ரவி (இறந்தார்)
2. லெட்சுமணன்
3. குமார்
4. வசந்தா(இறந்தார்)
5. கலைமணி
6. மைனர் தையல்நாயகி

சார்பாக அவரின் கார்டியனும்,
தாயாருமான 5–ம் வாதி மூலமாக
(வ.ம.எண்.501/2016–ல் 28.11.2016
அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்
கீழ் 5, 6 வாதிகள் இறந்த முதல் வாதிக்கு வாரிசாக
சேர்க்கப்பட்டுள்ளார்கள்) ...மனுதாரர்கள்/வாதிகள்

7. பாலமுருகன்
8. சுமதி
9. ராஜா
10. கண்ணன்
11. மாலதி ... 7 முதல் 11 மனுதாரர்கள்/ வாதிகளாக சேர்க்க வேண்டிய நபர்கள்

...எதிர்...

சுசீலா ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 21.12.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு R.ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய

பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கின் பிராதை திருத்த செய்ய அனுமதி கோரி இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–6, விதி–17–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் மனுவில் 7–ம் மனுதாரர் ஆவார். அசல் வழக்கில் 4–ம் வாதியின் வாரிசு ஆவார். மனுதாரர்கள்/வாதிகள் எதிர்வாதி மீது சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கையில் 4–ம் வாதி 09.09.2020 அன்று இறந்துவிட்டார். இறந்த 4–ம் வாதிக்கு 7–ம் மனுதாரையும் 8–ம் மனுதாரரையும் வாரிசாக சேர்க்க இடைமனு எண்.4/2022 மனு தாக்கல் செய்து அது 20.12.2022 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் 9, 10, 11 மனுதாரரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி இடைமனு எண்.6/2023–ல் மனு தாக்கல் செய்து அது 18.11.2023 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு இடைமனுக்களையும் அனுசரித்து அசல் பிராதை திருத்தம் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகவும், நியாமாகவும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கின் பிராதை திருத்தம் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறிப்பாணையின் சுருக்கம்.**

(i) இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. எதிர்மனுதாரர்/பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளை தவிர மனுதாரர் மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்த மனுவில் கண்டுள்ள சங்கதிகளை

எதிர்மனுதாரர் மறுக்கின்றார். மேற்படி அசல் வழக்கில் புதிய தரப்பினர்களை சேர்க்க மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு ஏற்ககூடியதல்ல. இந்த வழக்கு 2011–ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் தற்பொழுது இந்த வழக்கில் புதிய தரப்பினர்களை அசல் வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்திருப்பது ஏற்கக்கூடியதல்ல.

(ii) அசல் வழக்கில் புதிய தரப்பினர்களை சேர்க்க ஏன் கால தாமதம் ஏற்பட்டது என மனுதார்கள் மனுவில் கூறவில்லை. இந்த வழக்கில் சேர்க்க வேண்டிய புதிய தரப்பினர்களை ஏன் அசல் வழக்கு தாக்கல் செய்யும் பொழுது தரப்பினராக சேர்க்கவில்லை என்ற காரணத்தை மனுதாரர்கள் மனுவில் குறிப்பிடப்படவில்லை. வழக்குரையில் கூறியுள்ள வழக்கு மூலம் தவறு. ஆனால் வழக்கு தாக்கல் செய்யும் பொழுது ஒரு வழக்கு மூலம் இருக்கும் பொழுது, வழக்குரையில் கூறியுள்ள வழக்கு மூலம் இந்த புதிய தரப்பினர்களை கட்டுப்படுத்துமா என கேள்வி எழுகிறது. எனவே அசல் வழக்கில் புதிய தரப்பினர்களை சேர்க்க மனு கொடுத்து இருப்பதற்கான காலதாமத்திற்கு எவ்வித விளக்கமும் மனுதாரர்கள் மனுவில் கூறாததால் இம்மனு ஏற்க்க கூடியதல்ல. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்கள்/புதியதாக சேர்க்க வேண்டிய தரப்பினர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள்/புதியதாக சேர்க்ப்படவேண்டிய தரப்பினர்கள் மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**தீர்வு:**

5. (i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 1 முதல் 6 மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பின்னிட்டு சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி அசல் வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து இறந்துபோன ராஜமாணிக்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதால் மேற்படி ராஜமாணிக்கத்தின் வாரிசுகள் அனைவரையும் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியுள்ளதாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ராஜமாணிக்கத்தின் வாரிசுகள் தரப்பினர்களாக உள்ள நிலையில் கால தாமதமாக தாக்கல் செய்யும் இம்மனு எவ்வகையிலும் பாதிக்கப்படுவதில்லை.

(ii) ஏற்கனவே தரப்பினராக சேர்க்ககோரி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு அதன் விளைவாகவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதியின் கோரிக்கை நிராகரிக்கும் பட்சத்தில் ஒரே வழக்கு சொத்து குறித்து பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும்,தரப்பினர் மற்றும் வழக்கு சொத்திற்கு இடையேயான அனைத்து பிரச்சனைகளையும் தீர்ப்பதின்மூலம் தரப்பினர்களுக்கிடையே எழும் பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை (Multiplicity proceedings) தவிர்க்க இயலும். இம்மனுவினை அனுமதிப்பதால் வழக்கின் தன்மையும், ஏற்கனவே பிரதிவாதிக்கு எதிரான வழக்குமூலங்களும் எவ்வித மாற்றமும் ஏற்படபோவதில்லை என்று கருதி மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும், மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறே இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.7/2023–ல்
அசல் வழக்கு எண்.78/2011
நாள்.06.01.2024